**மாத்தளை பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2019 மார்ச் 22 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 23 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாத்தளை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கிடைக்க வேண்டிய செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) கிடைக்க வேண்டிய கணக்கு** | | |
| மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையில் இருந்து வரும் கிடைக்க வேண்டிய தொகை ரூபா 807,368 ஆன கணக்கு மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மதிப்பீட்டு வரிகள், காணி வரிகள் மற்றும் நீர் சேவைக் கட்டணங்கள் ஆகியவற்றை அறவிடுவதோடு, அறவிட முடியா மீதிகளை நீக்கி விடவும் நடவடிக்கை எடுக்கப்படும். மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையில் இருந்து வரும் ரூபா 27,000 பெறுமதியான முத்திரைக் கட்டணம் கூட இன்னும் கிடைக்கப்பெறவில்லை. |
| **(ஆ) செலுத்த வேண்டிய கணக்கு** | | |
| மூன்று வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக நிலுவையிலிருக்கும் வழங்கப்பட வேண்டிய தொகையின் | வழங்கப்பட வேண்டிய தொகையைக் கொடுத்துத் தீர்க்க | சம்பந்தப்பட்டவர்களுக்கு அத் தொகையை வழங்கி கணக்கினைத் தீர்க்க என்னால் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| மொத்தப் பெறுமதி ரூபா 2,157,299 ஆகும். | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எடுக்கப்படும். | |

**1.3.2 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை**

**தகவல்கள் வழங்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபாய் 61,166,291 பெறுமதியான இரண்டு கணக்குகளுக்குரிய அத்தாட்சிகள் முன்வைக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமான விதத்தில் அதை நிரூபிக்க முடியவில்லை. | உரிமையை நிரூபிப்பதற்குத் தேவையான சான்றுகளைத் தயார் செய்யவும், அவற்றைப் புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சொத்துக்களின் உரிமைகளை உறுதிப்படுத்திக் கொண்டு மேற்கட்ட நடவடிக்கைகளை எடுக்க என்னால் ஆவண செய்யப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், நிதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நிதி விதிமுறைகள் 571 மற்றும் 572 | காலம் கடந்து நிலுவையிலிருக்கும் வைப்புத் தொகைகள் 8 மற்றும் தொழில்துறை வைப்புத் தொகைகள் 62 சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலம் கடந்து நிலுவையிலிருக்கும் வைப்புத் தொகைகள் சம்பந்தமாக நிதி விதிமுறைகளுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மூன்று மாத காலங்களுக்குள் அவற்றை விடுவிக்க அல்லது வருமானத்தில் சேர்க்க என்னால் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதியஇல 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆவது பந்தி | பிரதேச சபைக்குச் சொந்தமான 12 வாகனங்கள் எரிபொருள் எரிதல் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையில் வழங்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களுக்கிணங்க எரிபொருள் எரிவு பரிசோதனைகள் நடத்தப்படல் வேண்டும். | உடனடியாக எரிபொருள் எரிதல் சோதனை செய்யப்பட்டு என்னால் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

……………..

### 2.1 நிதி விளைவுகள்

…………………

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 43,712,130 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 31,767,098 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

-----------------------------------

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-----------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 5,276,200 | 1,247,088 | 3,353,109 | 584,442 | 7,849,000 | 8,717,038 | 6,462,041 | 4,721,011 |
| (ii) | வாடகை | 1,405,000 | 390,020 | 551,325 | 26,095 | 25,001,000 | 453,805 | 1,855,910 | 26,500 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள | 1,400,000 | - | 1,406,592 | - | 5,800,000 | - | 5,430,400 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 22,026,000 | 7,372,742 | 17,277,605 | 3,709,745 | 24,433,000 | 22,100,000 | 4,005,392 | 21,257,306 |
| | மொத்தம் | 30,107,200 | 9,009,850 | 22,588,631 | 4,320,282 | 63,083,000 | 31,270,843 | 17,753,743 | 26,004,817 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

…………………..

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அரசாங்க நிறுவனங்களிலிருந்து ரூபா 25,507 கணக்கு மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) ஏக்கர் வரி**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரை சொத்துக்களுக்கான வரிகள் ரூபா 223,215 பெறுமதியான தொகையானது வருடக் கணக்காக நிலுவையில் இருந்ததுடன், அவற்றை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தொகை அறியப்பட்டு, கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகைகள் அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை கண்டறியும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு, இதற்கு மேலும் அறவிட முடியாக் கடன்களை முறையான ஒப்புதலுடன் நீக்க நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) நீர் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய நீர் கட்டணத்தின் மொத்த நிலுவைத் தொகை ரூபா 3,709,745 ஆக இருந்ததோடு அதில் நூற்றுக்கு 68 அதாவது ரூபா 2,504,865 தொகை ஒரு வருடத்தைக் கடந்தும் நிலுவையிலிருந்தது. இந்த நிலுவைத் தொகையில் 2010 க்கு முன்னர் செயலிழக்கச் செய்யப்பட்ட நீர் வழங்கல் திட்டங்கள் ஐந்திலிருந்து அறவிடப்பட வேண்டிய நீர் கட்டணங்களின் நிலுவைத் தொகை ரூபா 1,212,959 ஆகும். | நிலுவைத் தொகைகளை அறவிடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | நீண்ட காலமாக செயற்பட்டு வந்த 5 நீர் வழங்கல் திட்டங்களின் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டதால் இந்த நிலுவை உருவானது. அந்த நீர் வழங்கல் திட்டங்கள் செயலிழந்ததும், நீர் விநியோகிக்கப்படாத காலகட்டத்திலும் கட்டணப் பட்டியல்கள் வழங்கப்பட்டு அவை ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. அவ்வாறான கட்டணப் பட்டியல்களையும், அறவிட முடியாத் தொகைகளையும் நீக்க என்னால் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,586,750 ஆகவும், முத்திரைக் கட்டணம் ரூபா 33,708,123 ஆகவும் இருந்தன. | நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக, தலைமைச் செயலாளரிடம் பல தடவைகள் எழுத்து மூலமாகவும், வாய் வழியாகவும் கோரிக்கைகளை முன் வைத்த போதிலும், இதுவரையில் அந்த நிலுவைத் தொகையை அறவிட இயலாதுள்ளது. |

### 2.2.4 மிகை கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்ட விதிமுறைகளுக்கிணங்க சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக மீளாய்வாண்டிலும், முன்னைய வருடங்களிலும் விதிக்கப்பட்ட மேலதிகக் கட்டணங்களின் பெறுமதி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,716,708 அறவிடப்பட வேண்டிய தொகையாக நிலுவையிலிருந்தது. | சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து மேலதிகக் கட்டணங்கள் உடனடியாக அறவிடப்படுவதோடு கட்டணங்களைச் செலுத்தாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிடப்படாத நிலுவைத் தொகையை அறவிட என்னால் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

### (அ) எதிர்பார்த்த நன்மைகளைப் பெறாதிருத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு மாகாண அபிவிருத்தி வழங்கல் திட்டத்தின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்படுவதாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்த குப்பையைக் கொண்டு செல்லும் கம்பெக்டர் வாகனத்துக்காக சபை வழங்குவதாக ஏற்றுக் கொண்டிருந்த ரூபா 4,374,809 தொகையை 2018 நவெம்பர் 27 ஆம் திகதி மத்திய மாகாண பிரதான அமைச்சிடம் கையளித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் அந்த வாகனம் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட அந்த வாகனத்தை உடனடியாகப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறிப்பிட்ட அந்த வாகனத்தை சபைக்குத் தருமாறும், இல்லாவிட்டால் அப் பணத் தொகையைத் திருப்பித் தருமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. |

## (ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இல. 1533/16 மற்றும் 2008 ஜனவரி 25 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதி விஷேட வர்த்தமானியின் ”ஆ” பிரிவின் 27 மற்றும் 28 உட்பிரிவுகளுக்கிணங்க தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் பொலிதீனை உருக்கும் உபகரணத்துக்கும், திண்மக் கழிவகற்றும் செயற் திட்டத்துக்கும் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து உரிமம் பெறப்பட்டிருக்கவில்லை. | உடனடியாக சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து உரிமம் பெறப்பட வேண்டும். | உடனடியாக சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து உரிமம் பெற என்னால் நடவடிக்கை எடுக்கப்படும். |

## (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால் 2017 ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி NP/SP/SDG/17 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடையும் திட்டங்கள் எவையும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதோடு, 2018 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 280,000 பணத் தொகையும் நிலையான அபிவிருத்தி செயற்பாடு களுக்காக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களுக் கிணங்க நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிலையான அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்படும் செலவினங்களை முறையாகக் கணக்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகிறேன். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 1,400,000 பெறுமதியான ட்ரக்டர் வண்டியொன்று 2018 மே 14 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மைய தினமொன்றில் பிரதேச சபை வளாகத்தில் வைத்து தீப்பற்றி எரிந்து ஏழு மாதங்கள் கடந்த நிலையிலும் கூட நிதி விதிமுறைகள் 104(3) மற்றும் 104(4) பிரகாரம் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி விதிமுறைகள் பிரகாரம் ஆய்வுகள் உடனடியாக நடத்தப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ட்ரக்டர் வண்டி புதுப்பிக்கப்பட்டு, போக்குவரத்துக்கு உகந்த விதமாக சீரமைக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்படுவதோடு, தற்போது தேவையான ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதை அறியத் தருகிறேன். |
| (ஆ) வியாபார அனுமதிப் பத்திரமோ, சுற்றாடல் அனுமதிப்பத்திரமோ இல்லாமல் 5 வருடங்களுக்கும் மேலாக 500 க்கும் 1500க்கும் இடைப்பட்ட எண்ணிக்கையான கோழிகளைக் கொண்டிருந்த 4 கோழிப் பண்ணைகள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெளிக்கள ஆய்வுகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளவும், அந்த வர்த்தக நிலையங்களை தகுதி நீக்கம் செய்யவும், அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளாத சட்டவிரோதமான வர்த்தக நிலையங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தேவையான பொறுப்புக்களும் அதிகாரங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. |

### 3.3. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் ஊழியர்களிடையே 16 பதவிகளில் 41 வெற்றிடங்களும், 4 பதவிகளில் 10 மேலதிக ஊழியர்களும் காணப்பட்டார்கள். | வெற்றிடங்களை நிரப்பவும், மேலதிக ஊழியர்களை ஒழுங்குபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போதுள்ள வெற்றிடங்களுக்கு உடனடியாக தகுதி வாய்ந்த ஊழியர்களை இணைத்துக் கொள்ள என்னால் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) (அ) 2018 மார்ச் 19 ஆம் திகதியன்று பாகம் பிரிப்பதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்த 4623 இலக்க பத்திரத்துக்குரிய லொக்நகர்வத்த இடத்திலிருந்து சபைக்கு பொது செயற்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 65.2 பேர்ச் காணியில் 36, 37, 38 மற்றும் 72 ஆகிய பாகங்களை சபைக்கு கையகப்படுத்திக் கொள்ள எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடனடியாக அந்தக் காணியின் பாகங்களைக் கையகப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்தக் காணியின் பாகங்களை சட்டரீதியாக கையகப்படுத்திக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்வேன். |
| (ஆ) சபையின் 15 நீர் வழங்கல் திட்டங்களிலிருந்த தண்ணீரானது அருந்துவதற்கு உகந்த நிலையில் இருக்கிறதா என்பதைப் பரிசோதித்து அதன் அறிக்கையைப் பெற்றிருக்கவில்லை. | பரிசோதனை நடத்தி உடனடியாக சம்பந்தப்பட்ட அறிக்கையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். | சுகாதாரப் பரிசோதனை அறிக்கையைப் பெற்றுக் கொள்ள, சுகாதார வைத்தியரிடம் வேண்டுகோள் விடுத்து, சம்பந்தப்பட்ட தண்ணீரின் மாதிரியைக் கொண்டு சென்ற போதும் இதுவரையில் அந்த அறிக்கை கிடைக்கவில்லை. |
| (இ) மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற 318 கட்டட விண்ணப்பங்களில் 263 மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருப்பதோடு, இணக்கச் சான்றிதழ் ஒரு விண்ணப்படிவத்துக்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. | இணக்கச சான்றிதழைப்பெற்றுக் கொள்ளாமை சம்பந்தமாக நகர அபிவிருத்தி கண்காணிப்பாளரின் செயற்பாட்டிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொழில்நுட்ப அதிகாரிகளின் மூலமாக மேற்பார்வை செய்யப்பட்டு இந்தக் கட்டுமானங்களுக்கான இணக்கச் சான்றிதழ்களை வழங்க என்னால் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகிறேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**……………………………….**

**விளைவற்ற சொத்துக்கள்**

**…………………………..**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 5 வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதி போக்குவரத்துக்குத் தகுதியற்றதென ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த ரூபா 30,000 பெறுமதியான மோட்டார் சைக்கிளொன்று சேதமாக விடப்பட்டிருந்தது. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மதிப்பீட்டு அறிக்கையை வழங்கத் தாமதமானதால் அந்த மோட்டார் சைக்கிள் தொடர்பான ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாதிருப்பதோடு விரைவில் செயற்குழுவின் அறிக்கையைப் பெற்றுக் கொண்டு மேற்கட்ட நடவடிக்கையை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். |

**3.6 பெறுகை**

**------------**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டுதல் கையேட்டின் 4.2.1 இணங்க முதற்கட்ட கொள்வனவுத் திட்டமோ, சிவில் வேலைப் பண்டங்களும் ஏனைய சேவைகளும் உள்ளடங்கிய விரிவான கொள்வனவுத் திட்டமோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டமானது சரியான முறையில் தயாரிக்கப்பட்டு ஒப்புதலின் கீழ் செயற்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகிறேன். |